ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

नास्था धर्मे न वसुनिचये नैव कामोपभोगे
यद्यद्भव्यं भवतु भगवन् पूर्वकर्मानुरूपम् ।
एतत्प्रार्थ्यं मम बहुमतं जन्मजन्मान्तरेऽपि
त्वत्पादाम्भोरुहयुगगता निश्चला भक्तिरस्तु ॥

मुकुन्दमालास्तवे ॥

எனக்கு தர்மங்களைப் பூராவும் அனுஷ்டிக்கவேண்டு மென்கிற ஆவல் இல்லை. அதிகமான பொருளை அடைய வேண்டுமென்னும் இச்சையில்லை. மற்றும் உலகிலுள்ள ஸ்திரீசுகம் முதலியவைகளை அடைவதிலும் விருப்பமில்லை. முற்பிறவியிற்செய்த கர்மாக்களை அனுசரித்து எதெது வரத் தகுந்ததோ, அதுவரட்டும். அனுபவிக்கத் தயாராயிருக் கிறேன். ஹே பகவன், ஹே மஹேச, இது ஒன்றுதான் தங்களிடம் அவசியம் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்கிற அதிகமான அவா மேலிட்டிருக்கின்றது. அஃதாவது, இந்த ஜன்மாவிற்குப் பிறகும் மறுஜன்மா எனக் கேற்படுமாகில் அக்காலத்திலும், தங்களுடைய சரணகமலங் களில் மாறாத உறுதியானபக்தி எனக்கு இருக்கவேண்டும் என்பதே.

ஒரு பகவத்பக்தன் தனக்கு இவ்வுலகிலுள்ள எவ்வித சுகங் களிலும், பரலோகத்தில் அடையக்கூடிய சுகங்களிலும் அற்ப மேனும் விருப்பமில்லையென்று கள்ளமில்லாத தன் உள்ளத்தை யறிவித்து, எப்பொழுதும் பகவானுடைய திருவடிகளில் சலன மில்லாத திடமான பக்தியிருக்கவேண்டுமென்று கருணைக்கட லான பகவானிடமே, மிகவும் வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறார். இதனால் பகவத்பக்தி எப்போதும் அவ சியம் வேண்டுமென்றும் அதனால் சகல புருஷார்த்தங்களையும் அடையலாமென்றும் போதிக்கப்படுகின்றது. சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

வேதாந்த ஸாரம்.

(ரு00-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி மஹாவாக்கியார்த்தம் நிரூபிக்கப்படுகின்றது.

'தத்வமஸி' என்கிற இந்த வாக்கியமானது மூன்றுவித ஸம்பந்தத்தால் அகண்டார்த்த போதகமாகின்றது. மூன்று ஸம்பந்தங்களாவன:—

1. பதங்களுக்கு ஸாமாநாதிகரண்யம், 2. பதார்த்தங்களுக்கு விசேஷண விசேஷ்யபாவம், 3. பிரத்யகாத்மலக்ஷணங்களுக்கு லக்ஷ்ய லக்ஷணபாவம் என்பவைகளே. இவ்விதமே,

सामानाधिकरण्यं च विशेषणविशेष्यता ।
लक्ष्यलक्षणसंबंधः पदार्थः प्रत्यगात्मनाम् ॥

என்று ஓர் அறிஞரும் வெளியிட்டிருக்கிறார்.

ஸமானமான வேற்றுமையை ஈறாக உடைய பதங்களுக்கு ஒரே அர்த்தத்திலிருக்கும் கருத்திற்கு ஸாமாநாதிகரண்யம்என்று பெயர் எங்ஙனம்(ஸோயம் தேவதத்த:) என்கிற இந்தவாக்யத்தில் முன்பார்க்கப்பட்ட தேசம் காலமிவைகளுடன்கூடிய தேவதத்த வாசகமான ஸ: என்கிற சப்தத்திற்கும் இந்ததேசம் இந்தக்காலம் இவைகளுடன்கூடிய தேவதத்தனைக்கூறும். 'அயம்' என்கிற சப்தத்திற்கும் ஒரு வியக்தியில் தாத்பர்ய ஸம்பந்தம் ஏற்படுகின்றதோ, அங்ஙனமே 'தத்வமஸி' என்கிற வாக்கியத்திலும் பரோக்ஷத்வாதி தர்மத்துடன்கூடிய சைதன்ய வாசக 'தத்' பதத்திற்கும் அபரோக்ஷத்வம் முதலிய தர்மத்துடன்கூடிய சைதன்ய

வாசகமான 'த்வம்' பதத்திற்கும் ஒரே சைதன்னியத்தில் உண்டாகும் தாத்பர்ய ஸம்பந்தத்தைதான் ஸாமானுதிகாண்ய ஸம்பந்தமென்று கூறுகிறார்கள். இதன் கருத்தாவது ஸோயம் தேவதத்த: என்கிற இடத்தில் 'ஸ' பதத்தால் இதற்குமுன் வேறு தேசத்தில் வேறுகாலத்தில் பார்த்த தேவதத்தனென்று பொருள் ஏற்படுகின்றது. 'அயம்' என்கிற பதத்திற்கு இந்த ஸமயம் இந்த இடத்தில் பிரத்தியக்ஷமாயிருக்கும் தேவதத்தன் என்று பொருள் கிடைக்கின்றது. இங்கு முன்பார்க்கப்பட்ட தேவதத்த பிண்டமும் தற்காலம் பார்க்கப்படும் தேவதத்த பிண்டமும் ஒன்றாக இருந்தாலும் முன்பார்த்த தேசகாலத்துடன் கூடிய வியக்தி தேசகாலங்களின் பேதத்தால் வேறாயிருந்தாலும் தேசகாலங்களை விலக்கிவிட்டு தேவதத்த வியக்தியை மாத்திரம் எடுத்துக்கொண்டு அதுவும் இதுவும் ஒரேதேவதத்த வியக்திதான் வேறல்லவென்று எப்படி பிரத்தியக்ஷமாய் அறியப்படுகின்றதோ, அப்படியே 'தத்வமஸி' என்கிற வாக்கியத்திலும் 'தத்' என்கிற பதத்திற்குப் பரோக்ஷத்வம் முதலான தர்மங்களுடன்கூடிய சைதன்யமென்றும் 'த்வம்' என்கிற பதத்திற்கு அபரோக்ஷத்வம் முதலிய தர்மங்களுடன்கூடிய சைதன்யமென்றும் பொருள் கிடைத்தாலும் ஸோயம் தேவதத்த: என்கிற இடத்தில் தேசகாலங்களைவிட்டு வியக்தியை மாத்திரம் கிரகித்ததுபோல் இங்கும் பரோக்ஷத்வம், அபரோக்ஷத்வம் முதலான தர்மங்களை விலக்கிவிட்டுச் சைதன்யத்தை மாத்திரம் கிரகித்துக்கொண்டால் ஒன்றுதான் வேறல்ல என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது.

விசேஷண விசேஷ்யபாவ சம்பந்த நிருபணம்.

ஸோயம் தேவதத்த: என்கிற வாக்கியத்தில் 'ஸ:' என்கிற சப்தத்திற்கு அர்த்தமான பூர்வகால பூர்வதேசங்களுடன்கூடிய தேவதத்தனுக்கும் இந்தக் காலதேசத்துடன்கூடிய 'அயம்' சப்தார்த்த தேவதத்தனுக்கும் ஒன்றுக்கொன்று ரூபத்தை விலக்குவதால் விசேஷண விசேஷ்யபாவம் எவ்விதம் ஸம்பவிக்கின்றதோ அவ்விதமே இந்த வாக்கியத்திலும் 'தத்' பதத்தின் பொருளான பரோக்ஷத்வம் முதலான குணங்களோடுகூடிய சைதன்யத்திற்கும் 'த்வம்' பதத்தின் அர்த்தமான அபரோக்ஷத்வம் முதலிய

குணங்களுடன்கூடிய சைதன்யத்திற்கும் ஒன்றுக்கொன்று பேதத்தை விலக்குவதால் விசேஷண விசேஷ்யபாவ சம்பந்தமாகிறது.

नीलमुत्पलमित्यत्र यथा वाक्यार्थसङ्गतिः ।
तथा तत्वमसीत्यत्र नास्ति वाक्यार्थसङ्गतिः ॥

இந்த வாக்கியத்தில் நீலம் உத்பலம் என்று விசேஷண விசேஷ்ய பாவத்தை அடைந்தவிடத்தில் எற்படும் வாக்கியார்த்தம்போல் சம்பவிக்காது.

पटाद्व्यावर्तते नील उत्पलेन विशेषितः ।
शौक्ल्याद्व्यावर्तते नीले नोत्पलं तु विशेषितः ॥
इत्थमन्योन्यभेदस्य व्यावर्तकतया तयोः ।
विशेषणविशेष्यत्वसंसर्गस्येतरस्य वा ।
वाक्यार्थत्वे प्रमाणान्तरविरोधो न विद्यते ॥

உத்பலத்திற்கு விசேஷணமான 'நீல' பதத்தின் அர்த்தமான நீல குணமானது வஸ்திரம் முதலியவைகளைச் சொல்லாமல்விட்டு உத்பலத்தையே நீலகுணமுடையதென்று கூறுகின்றது. 'நீல' பதத்தை விசேஷணமாகவுடைய உத்பலத்திற்கு விசேஷண பலத்தால் வெண்மை, சிவப்பு முதலிய நிறங்களைவிட்டு நீலமான உத்பலமென்றுதான் பொருள் எற்படும். இவ்விதம் ஒன்றுக்கொன்று பேதத்தை விலக்கிறபடியால் இவ்விரண்டிற்கும் விசேஷண விசேஷ்யபாவமென்கிற சம்பந்தத்தையோ வேறு சம்பந்தத்தையோ சொன்னால் வாக்கியார்த்தத்தில் மற்றுமுள்ள பிரமாணங்களுக்கு விரோதமில்லை.

अतस्संगच्छते सम्यग्वाक्यार्थो बाधवर्जितः ।
इदं तत्वमसीत्यत्र वाक्यार्थो नसमंजसः ॥

ஆகையால் இந்த இடத்தில் யாதொரு பாதகமுமில்லாமல் நன்கு வாக்கியார்த்தபோதம் எற்படலாம். 'தத்வமஸி' என்கிற இடத்தில் இந்தமாதிரி வாக்கியார்த்தம் சொல்லமுடியாது. ஏனென்றால்

तदर्थस्य परोक्षत्वादिविशिष्टचितेरपि ।
त्वमर्थस्यापरोक्षत्वादिविशिष्टचितेरपि ॥
तथैवान्योन्यभेदस्य व्यावर्तकतया तयोः ।
विशेषणविशेष्यस्य संसर्गस्येतरस्य वा ॥
वाक्यार्थत्वविरोधो हि प्रत्यक्षादिकृतस्ततः ।
संगच्छतेनवाक्यार्थस्तद्विरोधं च वच्मि ते ॥ ७२०.

பரோக்ஷத்வாதி விசிஷ்டசைதன்ய வாசகமான 'தத்' பதார்த்தத்திற்கும் அபரோக்ஷத்வாதி விசிஷ்டசைதன்ய வாசகமான 'த்வம்' பதார்த்தத்திற்கும் முன் சொல்லியதுபோல் ஒன்றுக்கொன்று பேதத்தை விலக்கக்கூடிய விசேஷண விசேஷ்யபாவ ரூபமான சம்பந்தத்தை அங்கீகரித்தால் வாக்கியார்த்தத்தில் விரோதம் சம்பவிக்கும். எவ்வித விரோதமென்றால் மேல்வரும் ஸஞ்சிகையில் காண்க. (தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

நரகசதுர்தசி.

சென்ற மூன்று வருஷங்களாக ஆவணி அவிட்டம் பிளவுபடுவதைக்கண்டு சகியாது போல இவ்வருஷம் நரகசதுர்தசி புரட்டாசி மாதத்தில் போட்டிருப்பதை 28-நெ. பஞ்சாங்கம், மருத்துவக்குடி, சிக்கல், ஸ்ரீரங்கம், முதலிய பஞ்சாங்கங்களில் காணலாம். இதற்குக் காரணம்

प्रत्यूष आश्वयुक्कृष्णे चतुर्दश्यामिनोदये ।
स्नानमभ्यज्य कर्तव्यं नरैर्नरकभीरुभिः ॥
आश्वयुक्कृष्णपक्षे तु ।

என்கிற அநேக வசனங்கள் ஆச்வினமாஸத்தைக் குறிப்பிடுவதால் "नक्षत्रेण युक्तः कालः" என்கிற சூத்திரப்படி, சாந்திரமானப்

படி சுக்லப்பிரதமை முதல் அமாவாஸ்யை முடிய சாந்திரமான மாதமாக கொள்வதே நியாயம். மேற்கண்ட பஞ்சாங்கங்களுக்குள் ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்தில் " ஆகமங்களில் மாதங்களுக்கு சாந்திரமானமாக அர்த்தஞ் செய்திருப்பதால் புரட்டாசிமாதம் தீபாவளியும் தைமாசத்தில் மகாசிவராத்திரியும் சந்தேகப்படாமல் செய்யலாம் " என்று விளம்பரத்திலும் எழுதியிருக்கிறார்கள். அப்படி விருதாதிகளுக்குச் சாந்திரமானமாக அர்த்தங்கொள்பவர் கடந்த சித்திரை மாஸத்தில் சித்திராபருவம் போட்டது உசிதமாகுமா ? சித்திரை 12உயில் வைசாகசுத்தம் வந்துவிட்டபடியால் 26உ சித்திராபர்வம் போட்டது எப்படிப்பொருந்தும்.

மேற்கண்டகாரணத்தினால் இவ்வருஷம் நரகசதுர்தசிகொண்டாட்டம், "आश्वयुक्कृष्णचतुर्दशी" என்பது வருகிற புரட்டாசிமீ 30உ யாகவே இருந்தாலும் நான் சொல்லவந்த விஷயத்தை பண்டிதமணிகள் ஆராய்ந்து நிச்சயமான காலத்தை ஆர்யதர்மத்தில் வெளியிட்டு பாமரர்களான என்போன்றவர்களை உஜ்ஜீவிக்குமாறு செய்வித்தல் அவர்களுடைய உத்தமகுணத்திற்குத் தகுதியாகும்.

விருதாதிகள் சாந்திரமானமாகவிருந்தாலும்

उषोऽभ्यङ्गं तुलास्नानं कृत्तिकादीपमेव च ।
धनुर्मासि हरेः पूजा शिवरात्रिव्रतं तथा ।
सौरमानेन कर्तव्यं चान्द्रमाने न कारयेत् ॥

என்று " தர்மசாஸ்திர ஸங்கிரஹம் " என்னும் கிரந்தத்தில் காண்பதுடன் வயோவிருத்தர் முகமாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

மேற்கண்ட, தீபாவளி; துலாஸ்நானம், கார்த்திகைதீபம், தனுர்மாஸபூஜை, மஹாசிவராத்திரி இவைகளை ஸௌரமானப்படியே செய்யவேண்டும். மேலும் கீதையில் கிருஷ்ணபகவான்,

मासानां मार्गशीर्षोऽहं ऋतूनां कुसुमाकरः ।

என்று சொல்லியிருப்பதால் கிருஷ்ணஸ்வரூபமான மார்க்கசீர்ஷ மாஸமான கார்த்திகைமாஸம் அமாவாஸ்யை கழித்த மறுதினம் முதல் தனுர்மாஸபூஜை செய்யவல்லவோவேண்டும் அவ்விதமும் காணவில்லை.

கிருத்திகா தீபோத்ஸவத்தில்,

त्रिविक्रमस्य सन्देशाद् पातालस्थमहाबलेः ।
कार्तिक्यां निशि दीपेन प्रीणयाहि पितृनन्तु ॥

என்கிற வசனத்தில் **कार्तिक्यां** என்றிருப்பதால் அந்த தீபோத்ஸவக் கொண்டாட்டத்தை கிருத்திகா சுத்தமான ஐப்பிசிமாதத்தில் போட்டிருக்கவேண்டும். அப்படிப் போடாமல் தீபோத்ஸவத்தை கார்த்திகை மாதத்தில் போடப்பட்டிருக்கிறது.

நரகசதுர்தசி ஸ்நாநத்திற்கு திதிப் பிரதானமாயிருந்தாலும், கௌணமாகவோ அல்லது முக்கியமாகவோ சூர்யன் சந்திரன் இருவரும் ஸ்வாதீநக்ஷத்திரத்தில் இருக்கவேண்டும்.

स्वातिस्थिते रवाविन्दुर्यदि स्वातिगतो भवेत् ।
दीपैर्नीराजितादत्र दीपावलिरिति स्मृता ॥

என்றிருப்பதால் வருகிற புரட்டாசிமீ 30உ சித்திராநக்ஷத்திரம் இரண்டாம் பாதத்தில் சூர்யனும் உத்திரம் நாலாம் பாதத்தில் சந்திரனும் சேருகிறான். ஐப்பிசி 29-தேதியில் சுவாதியில் சந்திரனும் விசாகா நக்ஷத்திரம் மூனும் பாதத்தில் சூர்யனும் இருக்கிறார்கள். மேலும், **आश्वयुक्** என்னும் லக்ஷணம் ஐப்பிசிமாஸத்தில் பொருந்தியிருக்கிறது. அதாவது கீழ் சொன்ன **नक्षत्रेण युक्तः कालः** என்னும் வாக்கியத்திற்கிணங்க

अश्विनीनक्षत्रेण युक्ता पौर्णमी आश्वयुजी, आश्वयुजी अस्मिन्मासे इति आश्वयुज्मासः ।

எந்த மாஸத்தில் அச்வநீ நக்ஷத்திரத்தோடு கூடின பருவம் உளதோ அது ஆச்வினமாதம் ஆகையால் இவ்வருஷம் ஐப்பிசிமீ 15உபருவம் 43 நாழியும் அசுவநீ நக்ஷத்திரம் 36-நாழியும் இருப்பதால் ஆச்வினமாதம் லக்ஷணத்துடன் கூடியிருக்கிறது.

ஸ்வாதியில் சந்திரனும் சூர்யனும் இருக்கவேணுமென்பதற்கு சந்திரனுவது இருந்துகொண்டிருக்கிறான் ஸௌரமான அனுஷ்டானம் செய்யவேண்டும் என்னும் வசனத்திக்கும் விரோ

தமில்லாமலிருக்கிறது வழக்கம் என்றும் ஆசாரசாஸ்திரத்திற்கும் முறண்படாதிருக்கிறது. இந்த தீபாவளிப் பண்டிகையானது சந்தியாவந்தனம் சிராத்தம் முதலான ச்ரௌதஸ்மார்த்த கர்மங்கள் போல் செய்யாதிருந்தால் விசேஷமான தோஷத்தைக் கொடுக்கக்கூடியதல்ல செய்தால் க்ஷேமம். செய்யாவிடில் க்ஷேமக் குறைவில்லை. ஆகையால் இவ்வருஷம் வருகிற ஐப்பிசிமீ 29உ நரகசதுர்தசி ஸ்நானத்தைஅனுஷ்டிப்பது உசிதமாகும் என்பதை என் சிறறறிவிற்கு எட்டியவரை எழுதி அறிஞர்களுடை அபிப்பிராயத்தையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

வருகிற தைமீ 29உபோட்டிருக்கும் மஹாசிவாத்திரிக்கும் இதுவே கேள்வியும் சமாதானமாகும்.

வீ. உமாமகேச்வர சாஸ்திரி,
கோவிந்த விலாஸ்,
காட்டுமன்னார் கோயில்.

மதிப்புரை.

ஸ்நானதர்மம்:—இஃது ஓர் தமிழ் மாதச்சஞ்சிகை. காஞ்சீபுரத்திலிருந்து இதன் ஆசிரியரான யோகி ஸ்ரீ வைஷ்ணவ தாஸரால் நமக்கு அனுப்பப்பட்ட இப்பத்திரிகையின் இரண்டாம் பாகத்தை வரப்பெற்றோம்.

இதில் சகல வியாதிகளுக்கும் உபவாஸமே சிறந்த ஔஷதம். தற்காலம் வைத்தியர்களால் உபயோகிக்கப்படும் மருந்துகள் சரீரத்திற்குக் கெடுதலைக் கொடுக்கின்றனவேயல்லாமல் சுகத்தைக் கொடுக்கும் சக்தி இவைகளுக்கில்லை. மேலும் வைத்தியர்களால் ஔஷதமில்லை என்று கைவிடப்பட்ட அம்மை, யானைக்கால் முதலிய ரோகங்களும் இந்த உபவாஸத்தால் குணமடைகின்றனவென்றும் ஆகையால் ரோகிஷ்டர்கள் வைத்தியர்களிடம் பிரமைகொண்டு கண்டமருந்தை வீணில் பணத்தைச் செலவிட்டு வாங்கி உண்டு சரீரத்தைக் கெடுத்துக்கொள்ளாமல் கால் பைசாக்கூடச் செலவின்றி நமது உபவாஸமருந்தை உபயோகித்தால்

விசேஷமான சரீர சௌக்கியத்தையும், யோக சக்தியையும் பெறலாம் என்பதை விரிவாய் பல மேற்கோளுடன் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. நம் சாஸ்திரங்களிலும் ஜ்வரம் முதலான சில வியாதிகளுக்கு (लंघनं परमौषधम्) என்று உபவாஸத்தையே சிறந்த ஔஷதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. சகல வியாதிகளுக்கும் ஏகமூலிகாப் பிரயோகமாக உபவாஸம் ஒன்றையே நம் யோகி வைஷ்ணவதாஸர் கூறுகின்றார். இவர்கள் அபிப்பிராயப்படி உபவாஸமே சகல வியாதிகளுக்கும் சிறந்த ஔஷதமாயிருக்கலாம். ஆனாலும் மருந்துகள் ஒன்றும் உபயோகமில்லை. அவைகளால் பிணி அதிகரிக்கின்றது என்பதைப்பற்றிமட்டும் கொஞ்சம் யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. இது உண்மையாயிருப்பின் மஹான்களான பதஞ்சலி, சரகர், தந்வந்திரி முதலியவர்களால் லோகோபகாரத்தின்பொருட்டு பல ரோகங்களையும் அவைகளுக்குற்ற நிதானங்களையும் அவைகளைப் போக்கவேண்டிய பலவாறான ஔஷதமுறைகளையும் விரிவாய் எழுதி வெளியிடப்பட்டிருக்கும் சரகம், அஷ்டாங்க ஹிருதயம் முதலான நூல்களும் பயனற்றனவாகும். இவ்விதம் உபயோகமில்லாத காரியங்களை அம்மகான்கள் செய்திருக்கிறார்களென்று அவர்களின் மகிமையை அறிந்த எவரும் கருதமாட்டார். ஆனால், தற்காலம் வைத்திய நூல்களிலும், அனுபவத்திலும் அற்பமேனும் பயிற்சியில்லாத சிலர் பொருளை சம்பாதிக்கவேண்டுமென்கிற அவாவின் மேலீட்டால் தாங்களும் வைத்தியர்களெனப் பெயர் வைத்துக்கொண்டு வியாதியின் நிலைமையை நன்கறியாமல், கண்டமருந்துகளைக் கொடுத்துப் பல கஷ்டங்களை விளைவிக்கிறார்கள் என்று பிரசித்தமாயிருந்தபோதிலும இதைக்கொண்டு பெரியோர்களால் வெளியிடப்பட்ட வைத்திய நூல்களும் அவைகளிற்கூறிய ஔஷதங்களும் உபயோகமில்லை என்று கூறுவது உசிதமாகத் தோன்றவில்லை.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

சிதம்பரம் M. S. வித்தியாசாலையில் நடைபெற்ற
கைர்வாண விநோதினி ஸபா.

இச்சிதம்பர மகா க்ஷேத்திரத்தில் விளங்கும் M. S. வித்தியாசாலையின்கண் நமது ஆர்யமொழியாகிய ஸம்ஸ்கிருத

பாஷையின் அபிவிருத்தியை முன்னிட்டு பரஸ்பரம் அன்பு, ஸத்தியம், நட்பு, நமது பிராசீனமான வர்ணாச்ரம தர்மங்கள் இவை யாவும் நம்தேசத்தில் எங்கும் பாவி எல்லா ஜனங்களும் க்ஷேமத்தை அடையவேண்டுமென்பதையும் முக்கிய நோக்கமாகக்கொண்டு ஸ்ரீ மீனாக்ஷி ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் பிர்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய சி. தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் गैर्वाणविनोदिनी "கைர்வாண விநோதினி" எனப் பெயர்பூண்ட ஓர் ஸபை ஸ்தாபிக்கப் பட்டது. அவ்வமயம் ஷ்ஷி வித்தியாசாலை அத்தியாபகர்களில் பிர்மஸ்ரீ ராஜா ஸோமசேகர தீக்ஷிதரவர்கள் ஓரியண்டல் ஸம்ஸ்கிருத ட்ரெயினிங் காலேஜ் பிரின்ஸிபால் பிர்மஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் M.A., L.T., பிர்மஸ்ரீ T. N. சுப்ரமணிய சாஸ்திரிகள் முதலிய சிறந்த பல பண்டிதர்கள் விஜயம் செய்திருந்தனர். 'மாணவர் கடமை' என்ற விஷயம் உபந்நியஸிக்கப் பட்டது. கடைசியில் அக்கிராஸனாதிபதி அவர்கள் முடிவுரை கூறினார்கள். பிறகு அக்கிராஸனாதிபதி அவர்களுக்கும் மற்றுமுள்ள சபையோர்களுக்கும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப் பட்டு ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய வணக்கத்துடன் சபை பூர்த்தியடைந்தது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

மதம்.

தற்காலத்தில் நாம் யாவரும் நமது குடும்பத்தில் இவ்விஷயத்தைப்பற்றி கவனஞ்செலுத்தி சிறுவர்கள் சிறுமிகள் மூலமாய் மதத்தை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய விஷயத்தில் கங்கணங் கட்டிக்கொண்டாலன்றி மதம் சிறிதுகாலத்தில் வேரறுபட்டு நசித்துவிடும்.

அதாவது மதம் என்ற வடமொழிச் சொல்லுக்கு கொள்கை என்று பொருள் ஏற்படுகிறது. கொள்கையென்றால் அவரவரது முன்னோர்களால் பிரமாணங்களை யனுஸரித்துக் கையாளப்பட்டு வருவது என்று அதன் கருத்தாகும்.

அதாவது இந்து மதம் என்று பிரகிருதத்தில் நாம் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

ஆழிசூழ்ந்த இப்பூமியனைத்துக்கும் திலகம்போன்ற இப்பா தகண்டத்தில் உதித்த யாவரும் இந்துக்கள் என்றழைக்கப்படுகி ருர்கள். இந்துக்கள் யாவரும் வேதத்தையும் தர்மசாஸ்திரத் தையும் நல்லவர்களின் ஆசாரத்தையும் பிரமாணமாகக்கொண்ட வர்கள். வேதம் என்பது புருஷனுலாக்கப்படாததால் அபௌ ருஷேயம் என்று கூறப்படும். மேலும் வேதமானது சப்தராசியா யுள்ளது. சிருஷ்டியின் தொடக்கத்தில் பரமமேச்வானுடைய முககமலத்தினின்று அனுயாஸமாய் மூச்சுக்காற்றுபோல் வெளிப் பட்டது. ஐஹிகமாயோ ஆமுஷ்மிகமாயோ உள்ள இன்பங்களை யறிவித்து அதற்கு சாதனங்களையும் அது அறிவிக்கிறது.

வேதங்களை ஆன்ருேர் மந்திரங்கள் என்றும் செப்புவர். **मन्** என்ற **धातु** விலிருந்து ஏற்பட்ட அச்சொல் நினைக்கப்படுகிற வை எனப் பொருள்படுகின்றது. முதன் முதலில் முனிவர்களின் மனதில் தவத்தால் தோன்றி அவர்களின்முகத்திலிருந்து வெளிப் பட்டவைகளாகும். அவைகளும் ஸ்வர விசேஷங்களோடுகூட வே உச்சரிக்கப்படுகின்றன. அந்த ஸ்வரம் தவறினுல் நற்பயன் கிடைக்காததோடு விபரீத பலமுமேற்படும். அவைகள் நம் முன் ஞேர்களால் பாடம் பண்ணப்பட்டு நெஞ்சிலேயே வைக்கப் பட்டு திருடர்கள் முதலான விரோதிகளாலும் அபகரிக்கப்படா மல் தாரணை செய்யப்படுகின்ற நித்தியமான பொருட்களாயும் விளங்குகின்றன. அம்மந்திரங்களைக் கண்டுபிடித்தவர்கள் பாரத் வாஜர், விச்வாமித்திரர் வஸிஷ்டர் போன்ற மகான்கள். அவர்கள் யாவரும் நமது கூடஸ்தர்களே. அவரவர்களின் சரிதத்தைமகா பாரதம்போன்ற பெரிய நூற்களால் அறியலாம். அவர்கள் வே தார்த்தங்களை நன்குணர்ந்து அம்மட்டோடு நின்று விடாமல், அவைகளைத்தெளிவாக நாமறியக்கூடிய விதமாய் (**धर्मशास्त्रम्**) தர் ம சாஸ்திரம் என்று பெயருடன்வெளியிட்டிருக்கிருர்கள். அவை களில் மனுஸ்மிருதி முதலான 18 ஸ்மிருதிகள் உண்டு. அவைக ளின் ஸாரத்தையும் ஒருங்கு சேர்த்துப்பெரியோர்களின் ஆசாரத் தையும் கைவிடாது, நிர்ணயம் பண்ணப்பட்ட வைத்திஞத தீக்ஷி தீயம் முதலான நூற்கள் இந்துக்களுக்கு மூலாதாரமாய் பிரகா சிக்கின்றன. அவைகள் வர்ணுசிரம வியவஸ்தையை நன்கு அறி

வித்து அவ்வியவஸ்தைக்குத் தக்கவாறு அனுஷ்டானத்தை யறி விக்கின்றன.

அவைகள் யாவும் புஸ்தகரூபமாயிருப்பதால் மட்டிலும் பிரயோஜனமில்லை, நாம் அதன்படிநடந்து சிறுவர்களையும் நடாத்தி வந்தால் இக்கலியிலும் நாம் தப்பி மேலுலகம் செல்லக்கூடியவர்களாவோம். அன்றேல் நரகம் என்ற கஷ்டமானஉலகில் இறங்கத் தலைப்பட்டவர்களாவோம். நமது முன்னோர்கள் காலையில் எழுந்து சரீரசுத்தி செய்துகொண்டு ஸ்நானஜபாதிகளையும் அக்னி கார்யத்தையும் செய்துகொண்டு பிறகு குடும்ப ஸம்ரக்ஷணமாயும் சிறிதுகாலம் கழித்து மாத்யான்னிகா நுஷ்டானத்தையும் விராமகாலத்தில் குடும்பகாரியத்தையும் ஸாயங்காலத்தில் ஸந்தியாவந்தனாதிகளையும் முடித்து தேவாலயஞ்சென்று பகவானிடம் வழிபட்டு பூஜித்து பகவத்தியானத்துடன் நித்திரைசெய்து எழுந்திருக்கும்போதும் பகவானை சிந்தனைபண்ணின வண்ணமாக எழுந்து தமது ஆசாரநிலையை நடாத்தி வந்தார்கள். அதனால் அவர்கள் தீர்க்கமான ஆயுஸ், பலம், செல்வம், மனோதைர்யம், கல்வி, ஆரோக்கியம் பெரியோரிடம் பக்தி அஹிம்ஸை கருணை முதலான மஹாகுணங்கள் பொருந்தி லோகோபகாரிகளாய் கீர்த்தி சரீரத்துடன் இதுகாறும் விளங்கிவருகின்றார்கள். நாமோ அவர்களின் மார்க்கத்திற்கு நேர் விரோதமாய் இருந்து வருகின்றோம். அதாவது நமது மதக்கிரந்தங்களில் பற்றற்று வயிறு வளர்ப்பதைக் கருதி மற்ற பாஷைகளில் செல்வத்தையும் புத்தியையும் சிலவழித்து முடிவில் இல்வாழ்க்கையின் சுகத்திற்குப் போதுமான செல்வத்தையும்பெறாமல் முகமலர்ச்சியின்றி நம்மைக்காட்டிலும் கீழ்ப்பட்டவர்களின் வீட்டு வாயலில் பேட்டிக்குத் திண்டாடுகிறோம்.

இஃதிருக்கட்டும், இம்மாதிரி அனாதியாய் தோன்றும் இவ் விந்துமதத்தைக் குலைக்கப் புதியமதங்கள் தலைப்பட்டன. இங்கு நாம் அம்மதங்களை தூஷிக்க முன் வரவில்லை. ஏனெனில் அவரவர்கள் தங்கள் தங்கள் மதம் உயர்ந்தது என்று சொல்லிக்கொள்வது ஸகஜமே. அவ்விதமிருந்தால் தான் அவரவர்கள் மதம் மேம்படக்கூடும். உலகத்தில் யாவரும் கொண்டாடக்கூடிய மஹான்களால் நிறம்பின இத்தேசம் காலவசத்தால் சற்றுதளர்ச்சியடையவே அந்நியநாட்டார் யாவரும் புகுந்து ராஜ்யத்தையும்

செல்வத்தையும் கொள்ளையடித்து தமது மதத்தையும் பெருக்கி வருகின்றனர். நம்முடைய மதத்திலோ ஒரே ஒரு தீர்மானமுண்டு. நம்மதத்திலுள்ள ஜனங்கள் மதத்தை நழுவவிட்டு வேறு மதம் சென்றனராயின் அவர்களை மீண்டும் நாம் சேர்ப்பதில்லை. நம் மதத்தில் அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் வளர்கின்றனர் என்ற பெருமையே நமக்கு வேண்டுவதில்லை. நம்முடைய மதத்தினர் குறைந்தாலும் மதம் அற்றுப்போகப்போகிறதேயில்லை. நாளடை வில்பகவான் அவதாரஞ்செய்துமதத்தைவிருத்தி பண்ணுவதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறார்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

பரத வம்சத்திலுதித்த அர்ஜுனா? எப்போது எப்போது தர் மத்திற்குக் குறைவும் அதர்மத்துக்குத் தலைகாட்டுவதும் ஏற்படு மோ அவ்வப்போது நான் அவதரிக்கிறேன் என்று வியம்புவதில் **ग्लानिः** என்ற பதத்தால் தர்மத்திற்குக் குறைவு வருமேயொ ழிய நாசம் ஏற்படாது என்று தைர்யம் கொடுத்திருக்கிறார்.

பள்ளுப்பறை பதினெட்டு என்று பஞ்சமன்முதல் இயல்பா கவேகூறப்படும் 18 ஜாதிகட்குத்தக்கவாறு தர்மங்கள் நமது நூற் களில் தெளிவாய் பக்ஷபாதமின்றி காணப்படுகின்றன. நம்மு டைய தேசமுன்னேற்றத்திற்கும் அவரவர்கள் ஸ்வதர்மமே அநு கூலமாகும். **परधर्मो भयावहः** என்று பகவான் வசனித்தபடி அந்நியதர்மத்தை யவலம்பிப்பதே கேட்டை விளைவிக்கும். இப் போதும் அநேகப் பாதிரிமார்கள் நமது புத்தியுள்ள சிறுவர்களை செல்வம், உத்தியோகம், வாலிபப்பெண் இவ்விதமான தந்திர மான மாயவழிகளால் இழுத்து வசப்படுத்தி பிறகு யாவற் றையும் பிடுக்கிக் கொண்டு திண்டாட விடுகின்றனர். அந்தோ! த்ரிசங்கு ஸ்வர்க்கம்போல் அவர்களின் கதியாகிறது. த்ரிசங்கு வுக்கு விச்வாமித்திரர் தன் தபோபலத்தைக்கொடுத்து தலைகீழாய் விழுந்தவனை ஒருவாறு சுகப்படுத்தினர். இவர்களுக்கோ இகத்தி லும் பரத்திலும் இன்பமில்லாமல் மேல்வழி யடையக்கூடாமல் **अन्धगोलांगूल** நியாயப்படி கஷ்டப்படுவதே கதியாகிறது. இது இருக்கட்டும். நம்மவரிலேயே சிலர் ஆர்ய ஸமாஜம் என்று ஓர் பெருங்கூட்டமுண்டாக்கி **अर्धजरतीय** நியாயப்படி, பாதிச்சுரைக் காய் கரிக்கு, பாதிச்சுரைக்காய் விதைக்கு என்ற விதமாய், வேத மார்க்கத்தில் சிலவற்றிற்குக் கட்டுப்பட்டும் சிலவற்றிற்குக் கட்

டுப் படாமலும் வர்ணாசிரம வியவஸ்தைக்கு முரண்பட்டு வரு கிறார்கள். கலிக்கு இதுவிஷயத்தில் ஒரு குதூஹலம்போலும்.

ஆனால் நமது நூற்கள் பலவிடங்களில் கலியைத் துதித்தும் கூறுகின்றன. கலியில் வர்ணாசிரமப்படி கூடியவரையில் இருப் பவன் மறு பிறப்பில்லாமல் நித்திய நிரதிசயமான பேரின்பத் தைப் பெறுகிறான். மற்ற யுகத்திலோ வெகுகாலம் வெகுஜன்மாக் களால்செய்த நற்கர்மங்களின்பயனாலேயே அப்பேரின்பம்கிட்டும் என்று விசேஷமாய் இக்கலியில ஈச்வரபஜனையைக்கைவிடாதவன் பகவானுக்கு அந்தரங்கனாகிறான்என்று பாகவதம்உபதேசிக்கிறது. அது யுக்திக்கும் பொருத்தமுள்ளதே. மற்ற யுகத்தில் மனமா னது நிஷ்களங்கமாய் உள்ளதாகும். அதாவது ஸாத்விக குணம் பொருந்தினதாயிருக்கும். இக்கலியிலோ, தாமஸகுணம்மேலிட்டு வேதாதிகளான பிரமாணங்களில் நம்பிக்கைக் குறைந்து, மேல் வாரியாக இன்பத்தைப் பயக்கும் துர்மதங்களில் பற்றடைந்து, இருள்மூடி வெளியில்வர மார்க்கந்தோன்றாது தவிக்கவேண்டிய விதமாய் மனம் செல்கிறது. அந்தோ! இது விந்தை!! சற்று கவனியுங்கள். நம்முன்னோர்கள் தங்களைப் பிடித்த மகம்மதியர் கள் காலத்திலும் அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களாய் வேதங் களை மனப்பாடமாக்கியவண்ணமே பூணூல் அறுக்கப்பட்டாலும், வேதசாஸ்திரச் சுவடிகள் எறிக்கப்பட்டாலும், தமது வீடுவாசல் அபகரிக்கப்பட்டாலும், ஆவி துறக்கப்பட்டாலும் தமது பண் டைய மகான்கள் ஆசரித்தவழியைக் கைவிடாது, குலதனமாக வைதிக இந்துமத் தர்மத்தை இதுகாறும் நிலைநாட்டிவந்திருக்கின் றனர். இப்போது நம்மைக் கொன்றாவது தங்கள் தங்கள் மதத் தைப் பெருக்கவேண்டும் என்று ஒருவரும் கொடிய வழியில் இறங்கவில்லை.

யானை தன்தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள் வதுபோல், நாமே புதிய வழக்கங்களில் பிள்ளைகளைப் பழக்கப் படுத்தி படுகுழியில் தள்ளுகிறோம். முன்னோரின் வழியைப் பின்பற்றினவர்களின் சாந்த குணமும், ஆசார்யர்கள் தந்தைகள் இவர்களிடத்திலுள்ள பக்தியும் இப்போது மேல்நாட்டாரின் நாகரிகவலையில் சிக்கினவர்களுக்குச் சிறிதேனும் காண்கிறதோ? அந்தோ! இக்காலத்திய துர்ப்பாஷை பயில்கின்ற மாணவர்கள் தந்தைகளை அடித்துத்துரத்தியும், தமது மனைவிகளைப் பலரறிய வெளியில் அழைத்துப்போயும் தாமே அவர்களின் பதிவிரதை நிலைமையைக் கெடுக்க வழிகாட்டிகளாய் நிற்கின்றனர். நமது பாரததேசத்துப் பெண்கள் பிறரின் முகத்தைக் கனவிலும் நினை யாதவர்கள். அவர்கள் பலர் அறிய பள்ளிக்கூடங்களில் புகுந்து

B. A. பட்டங்கள் தரித்து உத்தியோகத்திற்கும் வந்துவிட்டனர். அந்தோ! இது பெரும் விந்தை. ஈச்வரனால் கொடுக்கப்பட்ட (வெளியில் விலகுவது, பிரஸவிப்பது) இவ்விரண்டையும் மாற்றக்கூடிய வல்லமையை அவர்கள் பெற்றுவிட்டால், அவர்கள் மதத்தை நாமும் சார்ந்துவிடலாம். அதுமாத்திரம் முடியவில்லையே? அதற்கு அவர்கள் என்ன விடை அளிக்கின்றனர்? ஒருசமயம் நாளடைவில் அவர்களும் புருஷர்களுக்குக் கர்ப்பத்தை யடைவிக்க வல்லவர்கள் ஆவோம் என்ற தைரியமுள்ளவர்களாய் பஹிரங்கமாய்ச் செப்பவும் துணிவர்.

ஆரியர்களே! வைதிகமதத்தைக் கைபிடித்த மஹான்களே! உங்கள் குலகூடஸ்தர்களை மறவாது அவர்களின் வழியைப் பின்பற்றி அரோகதிடகாத்திரத்துடன் இம்மை மறுமையில் சுகத்தை யடைய முயற்சியுங்கள். நம்முடைய மதக்ரந்தங்களில் ஐஹிக சுகத்தைக் கெடுத்து கஷ்டமான காரியங்கள் கூறப்படவில்லை.

दाराः पुत्राः शयनमशनं भूषणाच्छादने वा
यच्चेदक्षं पुमभिलषितं तेषु माशब्दिकः कः ।
किंत्वेतेषां भवति नियमः सेवने कोऽपि कोऽपि
द्वेषस्तस्मिन्नपि यदि भवेत्तत्र वक्ता कृतान्तः ॥

மனைவியோ, பிள்ளைகளோ, படுக்கையோ, உணவோ, நகையோ, துணியோ இன்னும் இவைபோன்ற விரும்பக்கூடியவை யாவையோ, அவைகளில் வேண்டாம் என்று தடுத்துச் சொல்கிறவர் யார்? ஆனால் இவைகளை ஸேவிப்பதில் ஒவ்வோர் நியமமுண்டு. உபநயனம் செய்த பிறகு வேதாத்தியயனஞ்செய்து உலகவிருப்பமிருந்தால் சாஸ்திரத்தில் விதித்தபடி, கன்னிகையை பாணிக்ரஹணஞ்செய்து, கர்மானுஷ்டானஞ்செய்து குடும்பவிருத்தியையே முக்கியமாகக் கருதி மனைவியுடன் வாழ்ந்து வைராக்கியம் ஏற்பட்டால், அதற்குமேலுள்ள ஆசிரமங்களைப் பின்பற்றவேண்டும் என்று நன்கு விளக்கி, இவைகளைக் கைக்கொள்வதில் ஒவ்வோர் நியமத்தை நூற்கள் அறிவிக்கின்றன. அவ்விதமான ஹிதத்தை போதிக்கும் ஸன்மார்க்கத்திலும், த்வேஷமேற்பட்டால் அவர்கள் விஷயத்தில் ஸகலர்களின் பாபபுண்யங்களுக்குற்ற பயனை அளிக்கும் யமதர்மராஜரே பதிலுரைப்பார் என்று ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

साध्या शंभोः कथमपि दयेत्यप्यसाध्योपदेशः
कोपं तस्य प्रथममपनुद्यैव साध्यः प्रसादः ।

कोपो वर्णाश्रमनियमिताचारनिर्लंघनोत्थः
शान्तिं नेयः स कथमधुनाप्यव्यवस्थाप्रवृत्तैः ॥

ஸ்ரீ சங்கராஜுன பரமேச்வரனின் தயையை எப்படியாவது பெற வேண்டும் என்பதும் முடியாத உபதேசமாகிறது. பகவானுடைய பிரஸாதத்தைப் பெறுவதற்கு அவருடைய கோபத்தைப் போக்கியே, பிரஸாதம் ஸாதிக்கத்தக்கதாகும். கோபமேற்படுவதேதனுலென்ருல், வர்ணம், ஆச்ரமம் இவைகளுக்குத் தக்கபடி விதிக்கப்பட்ட ஆசாரத்தைக்கைவிடுவதால் இப்போதோ, தம் மனதிற்குத் தோன்றுவதே நல்வழி என்று பிறர் பாஷையையே வேதமாகக்கொண்டு, கண்டவிடத்தில் உண்டு, கொண்டாட்டமாய்க் கண்டபெண்களைக் கைக்கொண்டு, முன்னோர்களை அவமதித்து, படுகுழியில் தள்ளிவிடும் வழியில் அஞ்சாநெஞ்சமுள்ளவர்களாய் இறங்குகிறோம். இவ்வாறிருக்கும்போது பகவானுடைய கோபத்தைத் தணிக்க எவ்வாறு கூடும்? என்று தீக்ஷிதரவர்கள் லோகானுபவத்தை வெளியிட்டிருக்கிருர்கள்.

அவரவர்களின் பாபகாரியங்களை நன்கறிந்து தண்டிக்க அதிகாரம்பெற்ற யமதர்மன் ஒருவருண்டு. தற்காலத்தில் மண்ணுலகில் தைரியத்தால் அக்கிரம காரியங்களைச் செய்தாலும், ஒருசமயம் அரசனுல் தண்டிக்கப்படாமல் தப்பித்துவிடலாம். நமது ஆவிகளை முடிவில் கைவசப்படுத்துகிற யமதர்மராஜரிடமிருந்து தப்புவது முடியாது.

ஆகையால், மதத்தைக் கைவிடாமல் நாம் நடந்துவருவதுடன் முன்காலத்து வழக்கப்படியே, நமது குழந்தைகளையும் காலையில் எழுப்பி, பகவத்தியான சுலோகங்களை சொல்லும்படிசெய்து ஸ்நானுதிகளான பழைய வழக்கத்தைப் பழக்கப்படுத்தவேண்டுமென்பதே இவ்வியாஸத்தின் கருத்து. இல்லாவிடில், சீக்கிரத்தில் கேடுவிருத்தியடையும், நன்ருய் துர்மார்க்கம் வளர்ந்துவிட்டால் பிறகு தணிப்பது அஸாத்தியமாகும். இவ்வார்யதர்மத்திலுள்ள ஒவ்வொரு வியாஸத்திலும் மததர்மங்கள் நன்கு விளக்கப்பட்டு வருவதால், ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வாங்கி க்ஷேமத்தையடையும்படி யாவரும் பிரயாஸப்படுவது ஒரு கடமையாகும். இவ்விதம் நமது தர்மங்களை பத்திரிகையாலும், உபந்நியாஸத்தாலும் ஆங்காங்கு வளர்ந்தோங்கச் செய்யும் நமது பரமாச்சார்யாளுக்கு மனப்பூர்ணமான வந்தனமளித்து இவ்வியாஸத்தை முடித்துக்கொள்கிறேன்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரி.